Ti Ta Nb Zr Ss Ni Pt

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

An ISO 9001 : 2015 Company

Tiaano® Innovation In Inert Metals since '92

#48, Noothanchary, Madambakkam, Chennai - 126. Ph.: +91 44 2278 1148, +91 94445 69900 Fax: 2278 1362 Email: marketing@tiaano.com Web: www.tianode.com

## "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2016-2017

- **Endeavour** : QUALITY
- **Turnover Target** : 120% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** : 100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Nov. 16 : 996 Nos.
  - Up to Oct. 16 : 989 Nos.
- **Performance Nov. 16 ...**
  - Turnover growth : 19.12%
  - Employment growth : 1.58%
  - 100% Attendance : 10.53%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Treatment Equipments.

Fib Tec Composite – FRP/ GRP Equipments.

HydroGen Go Green – HHO Generators

Titanictrade – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSE Curriculum)




## விதைப்பதை அறுப்பாய்!

மலைகளும் காடுகளும் நிறைந்த ஒரு இடத்திற்கு ஒருவர் குடும்பமாக சுற்றுலா சென்றார். மெய்சிலிர்க்க வைக்கும் கடுங்குளிரின் மாலைப்பொழுதில் மலை ஏறிக்கொண்டிருந்தார்கள் அப்பாவும் மகனும்.

திடீரென்று அவருடைய மகன் கீழே விழுந்து காயப்பட 'ஐயோ!' என்றான். அவனுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கும்படி மலையில் எங்கேயோ இருந்து வந்த சத்தம் 'ஐயோ!' என்றது. மகன் சற்று கோபமாக திரும்பி அப்பாவை பார்த்தான். சத்தம் அவரிடத்திலிருந்து வரவில்லை என்று புரிந்துக்கொண்டான். அவரோ அவனுக்கு பட்ட காயத்தை தன் கையால் தடவிக்கொண்டிருந்தார்.

தன்னை ஏளனமாக சொன்ன அந்த சத்தத்திடம் உரத்த சத்தமாக 'நீ யார்?' என்றான். அந்த கேள்விக்கு அங்கே இருந்து வந்த உத்திரம் 'நீ யார்?'. தந்தையோ எதுவும் தெரியாதது போல வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்.

'நீ என்னை ஏளனம் பண்ணுகிறாயா!' என்றான். அதுவும் 'நீ என்னை ஏளனம் பண்ணுகிறாயா!' என்றது. அவன் அதை திட்டினான். அதுவும் திட்டியது.

தன்னுடைய அப்பாவைப்பார்த்து 'இது என்ன சத்தம் அப்பா! நீங்க ஒன்னும் சொல்லலையே, மலையில் திருடர்கள் யாராவது ஒளிந்து கொண்டிருக்கிறார்களா? அவர்கள்தான் இப்படி பேசுகிறார்களா? என்றான்.

அவர் சிரித்துவிட்டு அந்த சத்தத்தை நன்றாக கவனித்துப்பார். 'நல்லதை சொன்னால் அதுவும் நல்லதையே சொல்லும்' என்றார்.

உடனே அவன் 'நான் உன்னைக் காண ஆசையாயிருக்கிறேன்!' என்றான். அதுவும் 'நான் உன்னைக் காண ஆசையாயிருக்கிறேன்!' என்றது. இவனுக்கு ஒரே ஆச்சரியம்!.

யார் அப்பா அது என்று மிகவும் ஆசையோடு கேட்டான். நீ எதைப்பேசுகிறாயோ அது மலையில் அப்படியே பட்டு எதிரொலியாக மீண்டும் உனக்கு கேட்கிறது அவ்வளவுதான் வேறு யாரும் பேசவில்லை என்றார்.

தகப்பனார் இந்த தருணத்தை பயன்படுத்தி தன் மகனுக்கு ஒரு காரியத்தை கற்றுக்கொடுத்தார். வாழ்க்கையும் அப்படித்தான் தம்பி, எதை பேசுகிறாயோ அல்லது எதை செய்கிறாயோ அது அப்படியே ஏற்ற நேரத்தில் நம்மிடத்தில் திரும்பிவரும்.

நீ அன்பை எதிர்பார்த்தால், மற்றவர்களையும் நீ அதிகமாக அன்பு கூர்ந்து நேசிக்கவேண்டும். சமாதானத்தை எதிர்பார்த்தால் மற்றவர்களோடு நீ அதிகமாக சமாதானமாக இருக்க வேண்டும்.

இப்படி நாம் எந்த அளவுக்கு நம்முடைய வாழ்க்கையிலிருந்து நன்மைகளை கூட்டி வழங்குகிறோமோ அந்த அளவுக்கு நமக்கு நிச்சயமாக திருப்பி கிடைக்கும்!.

*Compiled By : Ms. P. E. Nancy*
Director - Admin

## FUNCTIONAL WISHES




Happy New Year
01st January




Happy Pongal
14th January




Happy Republic Day
26th January

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| ESI Corporation | : Tambaram Dispensary |
| | Tel: 044 2226 0194 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mr. G. Ravindran**<br>Finance | **06th Jan.** |
| **Mr. C. Sivakumar**<br>Production | **10th Jan.** |
| **Mr. R. Manikandan**<br>Coating | **14th Jan.** |
| **Mrs. S. SasiRekha**<br>Marketing | **19th Jan.** |
| **Mrs. S. YagaValli**<br>Administration | **20th Jan.** |
| **Mr. M. NagaRajan**<br>Production | **20th Jan.** |
| **Mr. S. Karunakaran**<br>Coating | **20th Jan.** |
| **Mr. G. Murugesan**<br>Purchase | **21st Jan.** |
| **Mrs. M. Sudha**<br>Marketing | **26th Jan.** |
| **Mrs. J. Vanajambika**<br>Director | **27th Jan.** |

**Best Wishes from Tiaano Employees**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

அந்த நாத்திகர் வனப்பகுதியில் நடந்தார். காலைச் சூர்யோதயத்தைக் கண்டு ரசித்தார். பறவைகளின் இசைக்கேட்டு சிலிர்த்தார். இயற்கை அழகில் லயித்தார். எதிரே ஒரு சிங்கம் பாய்ந்து வந்தது. கடவுள் உடனே வந்து காப்பாற்றினார்.

இதை ஒரு பக்தர் கேள்விப்பட்டு கடவுளிடம் கோபித்துக் கொண்டார். "காலமெல்லாம் கடவுள் இல்லை என்று சொன்ன மனிதனை நீங்கள் ஏன் காப்பாற்றினீர்கள்?" கனவில் வந்த கடவுள் சொன்னார், "அந்த மனிதன் நான் படைத்த பிரபஞ்சத்தின் அழகை ரசித்தான். அதில் லயித்தான். இயற்கை அழகில் நான் இருக்கிறேன். கடவுள் என்ற கருத்தை ஒப்புக்கொள்ளாத மனிதன் என் இருப்பை அங்கீகரித்ததால் நான் காத்தேன்" என்றார்.

உலகின் அற்புதங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள தன்மையே கடவுள்.

— கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## ஆசிரியர் பாரபட்சமில்லாதவர் — ஒரு சூரியனைப் போல

துரோணரின் மகன் அஸ்வத்தாமன். ஆனாலும் தன்னைப் பிரதான சீடனாக ஏற்காமல் அர்ஜுனனை ஏற்றுக்கொண்டாரே என்று தன் தந்தை மீது வருத்தம். இதை நேரடியாகத் தந்தையிடம் கேட்டான்.

'என்னைவிட அர்ஜுனனுக்கு நீங்கள் அதிகமாகச் சொல்லித் தரவில்லை என்பது உண்மையானால் அவன் என்னைவிடத் திறமைசாலியாக இருப்பது எப்படி?'.

'நான் என்னவோ உங்கள் அனைவருக்கும் ஒரே மாதிரிதான் பாரபட்சமில்லாமல் வித்தைகளைச் சொல்லிக்கொடுத்தேன். ஆனால், அவனோ உங்களை விட அதிகமாக நன்றாகவே கற்றுக்கொண்டான். சொல்லப்போனால், உங்களுக்குப் பாடம் எடுப்பதை மறைந்திருந்து கவனித்த ஏகலைவன் உங்கள் அனைவரை விடவும், அர்ஜுனனை விடவும், ஏன்... என்னை விடவும் அதிகமாக என்னிடமிருந்து கற்றுக்கொண்டான்' என்றார் துரோணர்.

சொல்லிக்கொடுப்பது ஒரே மாதிரியானாலும், முயற்சியையும் பயிற்சியையும் பொறுத்தே ஒரு மாணவனின் திறமை நன்கு வெளிப்படுகின்றது.

## தன்னம்பிக்கை

பரிமளா பட்டோலி என்ற பெண்மணி இமயமலையில் உள்ள ஒரு சிகரத்தைத் தன் குழுவினரோடு சேர்ந்து சென்று தொட்டுவிட்டுத் திரும்பியுள்ளார். இவருக்கு மணமாகி இரண்டு குழந்தைகளும் உள்ளார்கள் — இதுவும் அதிசயமாகத் தோன்றவில்லையா — இதைக் கேளுங்கள் — இவர் ஒரு பார்வையற்ற பெண்மணி!

கயிற்றைப் பிடித்துக்கொண்டு அந்த பனிமலையில் ஏறியதை சற்றே நினைத்துப் பாருங்கள் — அதிசயம் புரியும்.

என்ன ஒரு மன உறுதி!
என்ன ஒரு தன்னம்பிக்கை!!

— திருச்சிராப்பள்ளி ஸ்ரீஜயப்ப சங்கம் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## தெரிந்து கொள்வோம்

### இரத்த கொதிப்பு குறைய

நெல்லி வற்றல், பச்சைப்பயிறு வகைக்கு 20 கிராம் எடுத்து ஒரு லிட்டர் தண்ணீரில் விட்டு 200 மில்லியாக சுண்டக்காய்ச்சி காலை, மாலை 100 மில்லி வீதம் சாப்பிட்டு வந்தால் இரத்தக் கொதிப்பு குறையும்.

### கடுக்காயின் மருத்துவ பண்புகள்

- ✓ கடுக்காய் அனைத்து நாட்டு மருந்துக் கடைகளிலும் கிடைக்கும். தரமான கடுக்காயை வாங்கி உடைத்து அதன் உள்ளே இருக்கும் பருப்பை எடுத்துவிட்டு நன்கு தூளாக அரைத்து வைத்துக் கொள்ளவும். இதனை தினசரி ஒரு ஸ்பூன் அளவு இரவு உணவுக்குப்பின் சாப்பிட்டு வர நோயில்லா நீடித்த வாழ்க்கையைப் பெறலாம்.
- ✓ கடுக்காய், கொட்டைப்பாக்கு, படிகாரம் ஆகிய மூன்றையும் வகைக்கு நூறு கிராம் எடுத்து ஒன்றாகத் தூள் செய்து கொள்ளவும். இதில் பல் துலக்கி வர அனைத்து பல் வியாதிகளும் தீரும்.
- ✓ திரிபலா என்பது கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் ஆகிய மூன்றும் சம அளவு கலந்த மருந்தாகும். இதனை எவர் வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம். குறிப்பாக ஆங்கில மருந்துகள் நிறைய உட்கொள்பவர்கள் இம்மருந்தினை காலை, இரவு உணவுக்குப்பின் சாப்பிட்டுவர ஆங்கில மருந்துகளால் உண்டாகும் பக்க விளைவுகளைக் குறைத்துக் கொள்ளலாம். மேலும் சர்க்கரை நோய்க்கு இணை மருந்தாகவும் பயன்படுத்தலாம்.
- ✓ கடுக்காயை சிறிதளவு தண்ணீர் விட்டு அரைத்து முகம் மற்றும் கைகளில் இருக்கும் கரும்புள்ளிகள் மீது தடவி வந்தால் அந்த வடு மறையும்.



*Compiled By: Mrs. M. Sudha*
*Marketing*

### எதையும் எதிர்கொள் — கவலைப்படாதே!

வளம் கொழிக்கும் நிலங்களுக்கு சொந்தக்காரனான அவனுக்குப் பிரச்சனையே மழைதான்! திடீரென இடியும் மின்னலும் காற்றும் கலந்துகட்டி அடிக்க, மழை ஊற்றும். இதற்கு பயந்து கொண்டே வேலைக்கு ஆட்கள் வர மறுக்க, பண்ணை வீட்டில் தனியாக இருந்தபடி விவசாயம் பார்க்க வேண்டிய துர்பாக்கிய நிலை!

ஒருநாள் ஒரு நடுத்தர வயது ஆசாமி வேலைக்கு வந்தான். “உனக்கு எல்லா வேலையும் தெரியுமா?” என்று அவனிடம் கேட்டான். வந்த ஆசாமி, “எப்பேர்ப்பட்ட மழையிலும் நான் நிம்மதியா தூங்குவேன்!” என்று பதில் சொன்னான்.

புதிரான இந்த பதில் அவனுக்குக் குழப்பத்தைத் தந்தாலும், வேறுவழியின்றி அவனை சேர்த்துக் கொண்டான். அவனும் பம்பரமாகச் சுழன்று வேலை பார்ததான்.

பண்ணை முதலாளிக்கு பரம திருப்தி. நாட்கள் அமைதியாக நகர்ந்தன. திடீரென்று ஒருநாள் இடியும் காற்றுமாக மழை ஆரம்பிக்க, பண்ணை முதலாளிக்கு பகீர் என்றது. ‘புது ஆளை நம்பி சும்மா இருந்துவிட்டோமே... அறுவடை செய்த நெல் திறந்த வெளியில் கிடக்கிறது... வைக்கோல் போர் ஒரு மூலையில் கிடக்கிறது. மாடுகள் தொழுவத்தில் பத்திரமாக இருக்கின்றனவா? கோழிகளை அடைத்து வைத்தானா...’ என புலம்பிக்கொண்டே, கையில் லாந்தரோடு வேலையாளின் குடிசைக்கு ஓடினான். அவனோ சுகமாக தூங்கிக்கொண்டிருந்தான். கோபமாக அவனை எழுப்பியதும், “நான்தான் சொன்னேனே முதலாளி... எவ்வளவு காத்து மழையிலும் நான் நிம்மதியா தூங்குவேன்” என்றபடி திரும்பவும் தூங்கிவிட்டான்.

முதலாளிக்கு அடக்கமுடியாத கோபம். முதலில் பண்ணையைக் காப்பாற்றுவோம்! அப்புறம் இவனைப் பார்த்துக்கொள்வோம் என்று வெளியில் ஓடிவந்தான்.

அவனுக்கு ஆச்சரியம் தாளவில்லை... நெல் மூட்டைகள் அழகாக அடுக்கி, தண்ணீர் புகாதவாறு தார்ப்பாய் போட்டு கட்டப்பட்டிருந்தன. வைக்கோலும் பத்திரமாக இருந்தது. மாடுகள் தொழுவத்தில் இருக்க, அதன் கதவு பாதுகாப்பாக மூடப்பட்டிருந்தது. கோழிகள் சுகமாக கூடைக்குள்ளிருந்தபடி கத்துவது கேட்டது, ‘எந்த மழையிலும் நிம்மதியாகத் தூங்குவேன்’ என்று அந்த ஆசாமி சொன்னதன் அர்த்தம் இப்போது அவனுக்குப் புரிந்தது.

**எதையும் எதிர்கொள்ளத் தயாராக இருந்தால், எதைப் பற்றியும் கவலைப்படத்தேவையில்லை!**

### Solution

When Mind is Weak, Situation becomes a Problem,

When Mind is Balanced, Situation becomes a Challenge,

When Mind is Strong, Situation becomes an Opportunity.

*Compiled from Internet*

## கவிதைகள்

### வாழ்க்கை

சரித்திரம் ஒரு முறை
உன் பெயரை சொல்ல வேண்டும் என்றால்
நீ பலமுறை என்னிடம் வர வேண்டும்
இப்படிக்கு “முயற்சி”.

### மகிழ்ச்சி படிகள்

விழுவதும் எழுவதும்தான் வாழ்க்கை.
ஏன் வீழ்ந்தோம் எப்படி எழுந்தோம்
என உணர்ந்தால் அதை அறிந்தால்
ஏற்றமோ இறக்கமோ என்றும் வாழ்வின்
மகிழ்ச்சி படிகளில் நாம் இருப்போம்.

### முயற்சி

வெற்றிகளை மட்டும்
வரலாறுகள் பேசுவதில்லை
தோல்விக்கும் அங்கே இடம் உண்டு
முயற்சி செய்வோம்
இரண்டில் ஒன்று நிச்சயம் கிடைக்கும்.

*Collected From Internet*

## ஹைக்கூ

மயானத்தில் மறைக்கும் கண்களுக்கு
மறுபிறவி கொடுப்போம்
மற்றவர்களுக்காக....

## சிந்தனைக்கு

### சாதனை

நீ எதை நினைக்கிறாயோ
அதுவாக ஆகிறாய்
உன்னை வலிமை உடையவன்
என்று நினைத்தால்
வலிமை படைத்தவன் ஆவாய்.
உன்னால் சாதிக்க இயலாத காரியம்
என்று எதுவும் இருப்பதாக
ஒருபோதும் நினைக்காதே....

**பணியாளர்கள் மற்றும் பணியாளர் களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**

**– Editor**

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி LIX)

### அழுக்கு எது? சுத்தம் எது?

உங்களது தொழிலாளர்கள் அல்லது சக ஊழியர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் இந்த மனோபாவத்தை ஊட்டாதவரை, நீங்கள் ‘5S’ தத்துவங்களை நெட்டுருப் போட்டுப் பின்பற்றினாலும் பலன் கிடைக்காது.

இதனால்தான், எல்லாரும் இந்தப் பணியில் ஈடுபடவேண்டும் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறது ‘செய்சோ’. யாரையும் விட்டுவைக்காமல் எல்லாருக்கும் தனித்தனி பொறுப்புகளைக் கொடுத்து, அவற்றைச் சரியாகச் செய்வதற்குப் பழக்குங்கள். ஒரு கட்டத்தில், அவர்களே தூய்மைப் பிரியர்களாகிவிடுவார்கள். இவ்வளவுதான் தந்திரம்!

இதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?

முதல் வேலையாக – உங்களுடைய பணியிடத்தில் சுத்தம் எது, அசுத்தம் எது எனப் பளிச்சென்று தெரிகிறதா என்பதைச் சோதிக்க வேண்டும். அடுத்து, இந்த வித்தியாசம் எல்லாருக்கும் தெளிவாகப் புரிவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் ஆராயவேண்டும்.

உதாரணமாக, உங்கள் வீட்டுச் சமையலறையில் ஒரு நாற்பது வாட்ஸ் பல்ப் அழுது வடிந்துகொண்டிருக்கிறது. கூடுதல் வெளிச்சத்துக்கு ஜன்னல்கள் கூட இல்லை. இந்த நிலையில் அழுக்கு எங்கே, சுத்தம் எங்கே என்று யாருக்கு வித்தியாசம் தெரியும்?

‘செய்சோ’வைச் செயல்படுத்த விரும்புகிறவர்கள், முதல் வேலையாகத் தங்களுடைய பணியிடத்தின் விளக்குகள் மற்றும் வெளிச்ச ஏற்பாடுகளைக் கவனிப்பது அவசியம்.

தொடரும்...

இன்று சிறப்பாக கொண்டாட்டம்

**நட்சத்திர வடிவில் நின்று மாணவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்து!**



ஏசு கிறிஸ்துவின் பிறப்பை குறிக்கும் வகையில் பல்வேறு வண்ணம் கொண்ட பிரமாண்டமான நட்சத்திர வடிவில் நின்று மாணவர்கள் ஒருவருக்கொருவர் கிறிஸ்துவமஸ் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்ட அற்புத காட்சி.

தாம்பரம்,டிச.25–

மாணவ மாணவிகள் ஏராளமானோர் ஏசு கிறிஸ்துவின் பிறப்பை குறிக்கும் வகையில் பல்வேறு வண்ணம் கொண்ட பிரம்மாண்ட நட்சத்திர வடிவில் நின்று ஒருவருக்கொருவர் கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் தெரிவித்துக் கொண்டாடினர்.

தாம்பரம் அடுத்த மணிமங்கலத்தில் உள்ள டியானோ வித்யாஷ்ரம் பள்ளியில் மாணவ மாணவிகள் இணைந்து கிறிஸ்துமஸ் விழா கொண்டாடினர். அதையொட்டி பள்ளியின் செயலாளர் நான்சி தலைமையில் மாணவ மாணவிகள்ஏராளமானோர் வண்ணஆடைகள்அணிந்து ஏசு கிறிஸ்துவின் பிறப்பை குறிக்கும் வகையில் பல்வேறு வண்ணம் கொண்ட பிரம்மாண்ட நட்சத்திர வடிவில் நின்று ஒருவருக்கொருவர் கை குலுக்கி கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் தெரிவித்துக் கொண்டனர்.

அதோடு நட்சத்திர வடிவில் நின்று கூட்டாக பிரார்த்தனை செய்தனர். இதனை பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஆச்சர்யத்துடன்கண்டுமகிழ்ந்தனர். பின்னர் ஏசுவின் பிறப்பு, வாழ்க்கை முறை உள்ளிட்டவை குறித்து மாணவ மாணவிகள் நாடகங்கள் நிகழ்த்திமகிழ்ந்தனர்.பள்ளி சார்பில் மாணவ மாணவிகளுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் தெரிவித்து இனிப்புகளும்,கேக்குகளும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பள்ளியின் ஆலோசகர்ஸ்ரீதர், முதல்வர் சுகுணாடேவிட்ராஜ்,துணை முதல்வர் ஆனந்த் உள்பட பலர்கலந்து கொண்டனர்.